# <u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC. 532/2024
Sessions)

( Prosecution P.W.4
Deposition of witness for (Defence
(Court

| Name | மாரிமுத்து | -- | |
|---|---|---|---|
| Father's Name | அம்மாசி | Calling | கூலி |
| Village | இந்திரா நகர் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of December 2025.

**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் தாலுகா இந்திராநகரில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.3 பால சரஸ்வதி என்னுடைய மனைவி. அ.சா.1, 2 எனது மதினியார் மகள்கள். விபத்தில் இறந்துபோன வள்ளியம்மாள் எனது மதினியார். கடந்த 03.12.2023ம் தேதியில் வள்ளிமயில் திருமணத்திற்கு துணி எடுப்பதற்காக மானகசேரியிலிருந்து திருவில்லிபுத்தூருக்கு சேர் ஆட்டோவில் சென்றோம். மேற்படி TN67BA1356 ஆட்டோவை எதிரி ஈஸ்வரன் ஓட்டிச் சென்றார். ஆட்டோவில் சோபனாவும், வள்ளிமயில் என்பவரும் இருக்கையில் அமர்ந்திருந்தார்கள். எனது மதினியாரும், எனது மனைவி மற்றும் முத்துலெட்சுமியும் பின்பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். ஆட்டோ ஓட்டுநருக்கு அருகில் நான் உட்கார்ந்திருந்தேன். சோபனாவின் இரண்டு வயது குழந்தையும், எனது 12 வயது சிறுமி பாண்டிச்செல்வி எங்களோடு ஆட்டோவிற்குள் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது பகல் 12.00மணி இருக்கும். அப்போது கொளூர்பட்டி அருகே சென்று கொண்டிருந்தபோது ஆட்டோ வேகமாக சென்றதால் எனது மதினியார் கீழே விழுந்துவிட்டார். எனது மனைவி கத்தியவுடன் எல்லோரும் திரும்பி பார்த்து ஆட்டோவை நிறுத்தி இறங்கிப்போய் எனது மதினியாரை அதே ஆட்டோவில் வைத்து திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அப்போது எனது மதினியார் மூச்சு பேச்சு இல்லாமல் இருந்தார். எனது மதினியார் சிகிச்சையில் சேர்ந்த அரைமணி நேரத்தில் அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து எனது மதினியாரின் பிரேதத்தை வாங்கிச் சென்று எங்கள்

ஊரில் எரியூட்டிவிட்டோம். பின்னர் இது குறித்து வள்ளிமயில் திருவில்லிபுத்தூர் போலிசாரிடம் புகார் மனு கொடுத்தார். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of December 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2025.12.19 16:34:50 -0400

**Chief Judicial Magistrate, Virudhunagar District at Srivilliputtur.**